# **DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**OS. No.76/2022 and OS.No.37/2024**

சாட்சி -PW1

பெயர் -ஜேக்கப்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **31.07.2026.**

வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தகப்பனார் சர்ச்சுக்காக செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த போது எனக்கு 10 வயது இருக்கும். அதே போல் செட்டில்மெண்டில் கண்டுள்ள சொத்து 7 1/2 செண்ட் என்றால் சரி. அந்த சமயத்தில் Church Father நல்லய்யா ஆரோன் என்றால் சரி. 7 1/2 சர்ச்சு சார்பாக நல்லய்யா ஆரோன் பெயரில் சர்ச்சுக்காக தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டது. தனிப்பட்ட முறையில் நல்லய்யா ஆரோனுக்காக எழுதிக் கொடுக்கபடவில்லை.

எனது தகப்பனார் 5 1/2 செண்ட் 15.06.1970 ல் நல்லய்யா ஆரோனுக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி. அது தாவா சொத்திற்கு ஒட்டினார் போல் உள்ளது என்றால் சரி. அந்த 5 1/2 செண்ட் கிரைய நிலம் தான் ரோடுக்கு ஒட்டினார் போல் உள்ளது என்றால் சரியல்ல. அந்த 5 1/2 செண்ட் கிரைய நிலத்தை தாண்டினால் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

எனது தகப்பனார் 12.11.1971அன்று 1120 சதுரடி சர்ச்சுக்காக நல்லய்யா ஆரோன் பெயரில் கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் கிரையம் எதுவும் செய்து கொடுக்கவில்லை. எனது தகப்பனார் 22.03.1989ல் இறந்து விட்டார். அந்த சமயத்தில் எனக்கு 28 வயது. எனது தகப்பனார் தாவா சொத்து 7 1/2 செண்டை சர்ச்சுக்காக 12.06.1970 எழுதிக் கொடுத்த பிறகு 19 வருடங்கள் கழித்து இறந்தார் என்றால் சரி.

எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை அந்த இடத்தில் நல்லய்யா ஆரோன் சர்ச்சு சம்மந்தமான நடவடிக்கைகள் செய்யவில்லை என்றும், 12.06.1970ல் கண்டுள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் சரத்துகளின் படி மேற்படி நல்லய்யா ஆரோன் செயல் படவில்லை என்று எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி.

மேற்படி சர்ச்சு தலைமையில் 5000 குடும்பங்கள் இருக்கிறார்கள் என்றால் சரி. எனது தாயார் 12.06.1970 தேதியிட்ட செட்டில் மெண்ட் ரத்து செய்த தேதியானது 2008 ஆம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது</u>.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 31st 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.31 06:29:33 +0600

Additional District Judge(FTC),
Vellore.